Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 346

சனிக்கிழமை
08 நவம்பர் 2025

ஐப்பசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



அநுர அரசின் பட்ஜெட்டில்

## 1,757 பில்லியன் ரூபா நிதிப் பற்றாக்குறை!

வருமானம் ரூ.5,300 பில்லியன்

செலவீனம் ரூ.7,057 பில்லியன்

கொழும்பு, நவம்பர் 8

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 757 பில்லியன் ரூபா நிதிப் பற்றாக்குறையுடனேயே இந்த பட்ஜெட் முன்வைக்கப்பட்டுள்ளது.

11

## பொய்கள், பித்தலாட்டங்கள் பட்ஜெட்டில் நிறைந்துள்ளன!

எதிர்க்கட்சித் தலைவர் கடும் விமர்சனம்



கொழும்பு, நவ. 8

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டமானது பொய்களும் பித்தலாட்டங்களும் நிறைந்ததாக அமைந்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

11

## ஊழலில் ஈடுபட்ட எவரும் தப்பிப்பதற்கு இடமில்லை

'ஹிட்லர்' கதைகளுக்கு ஜனாதிபதி பதிலடி

கொழும்பு, நவ. 8

ஊழல் மோசடியில் ஈடுபட்ட எவரும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது. நாங்கள் தண்டனையை வழங்கியே தீருவோம் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுர ஹிட்லர் போன்று செயற்படுகின்றார் என்றும், அவருக்கு எதி

11

மாகாணசபைகளுக்கான

## தேர்தல் முறைமையை பரிந்துரை செய்யுங்கள்

கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, நவ. 8

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி பொருத்தமான முறையைப் பரிந்துரைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க

11

## பட்ஜெட் மீதான விவாதம் ஆரம்பமாகின்றது இன்று!

கொழும்பு, நவ. 8

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இன்று ஆரம்பமாகவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அல்லது நாடாளுமன்ற உறுப்

11

## 2026ஆம் ஆண்டில் டிஜிற்றல் அ.அட்டை!

ஜூனுக்குப் பின் சாத்தியம்

கொழும்பு, நவ. 8

2026ஆம் ஆண்டில் டிஜிற்றல் அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் ஆரம்பமாகும் என்று ஜனாதிபதி அநுர நேற்று அறிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய பட்ஜெட் உரையின்

11

## யாழ். விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு நிதி!

கொழும்பு, நவ. 8

யாழ்ப்பாணம் உள்ளிட்ட விமான நிலையங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக பட்ஜெட்டில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஹிங்குராங்கொடை, சிகிரியா மற்றும் திருகோண

11

## வடக்கு - கிழக்கில் 2,500 வீடுகள்

கொழும்பு, நவ. 8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் பாதிக்கப்பட்டு வீடுகள் அற்ற நிலையில் வாழ்ந்துவரும் மக்களுக்கு உதவும் வகையில் 2,500 வீடுகளை அமைப்பதற்கு பட்ஜெட் ஊடாக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 5

11



2,500 ரூபாவால்

## உயர்ந்தது மஹாபொல!

கொழும்பு, நவ. 8

பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபா

11

### முச்சந்தி முரளி

'உந்த வாய்ப்பந்தலெல்லாம் நடைமுறைக்கு வந்தபிறகுதான் நம்பலாம் கண்டியளோ'



## 3 குழந்தைகளைப் பிரசவித்த பெண்ணொருவர் உயிரிழப்பு

வடமராட்சி வதிரியில் சோகம்!

யாழ்ப்பாணம், நவ. 8

திருமணம் செய்து 21 வருடங்களாகக் குழந்தைப் பேறு இல்லாமல் இருந்த பெண்ணொருவர், ஒரே தடவையில் மூன்று குழந்தைகளைப்

11

தமிழரசின் காங்கேசன்துறை தொகுதிக் கிளைக்கு

## நீதிமன்ற வாக்குறுதிக்கு முரணாக நிர்வாகத்தெரிவு

சட்டவிரோதச் செயலைக் கைவிடுமாறு கட்சித் தலைமைக்குப் பறந்தது கடிதம்

யாழ்ப்பாணம், நவ.8

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறை தொகுதிக்கிளைக்கு போதிய கோரம் இல்லாமல் சட்டவிரோதமாக நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது என்று, கட்சியின் பதில் தலைவருக்கு முன்னைய நிர்வாகத்தால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. புதிய நிர்வாகத் தெரிவு, பதில் தலைவரால் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட

11

மக்கள் பலம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4248
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 06 23 26 37
விசேட எழுத்து O

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1315
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 02 12 13 24

**NLB ஜய**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0274
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 3 2 8 5

**மெகா பவர்**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2354
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 41 52 63 80

**மஹஜன சம்பத**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 6006
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 4 7 1 1 3 0

**தன நிதானய**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2036
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 16 53 57 77
விசேட எழுத்து C

**சுப தவசக்**
திகதி 07.11.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0122
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 33 43 66

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாததால் பட்ஜெட் தொடர்பில் கடுமையான முடிவு

## தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

**கொழும்பு, நவ.8**

**தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு உட்பட தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கடுமையான தீர்மானமொன்று எடுக்கப்படும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் பேச்சு நடத்துவதற்கு நேரம் கோரி இருந்தோம். கடந்த ஜூலை மாதம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் அதற்குரிய பதில் ஜனாதிபதி தரப்பில் இருந்து இன்னும் வழங்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சிதான் மூன்றாவது பெரிய கட்சியாகும். அந்தக் கட்சியால் வழங்கப்பட்ட கடிதத்துக்கு ஜனாதிபதியொருவர் பதில் வழங்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். அதனால் வரவு-செலவுத்திட்டம்பற்றிநாமும் காத்திரமானதொரு முடிவை எடுக்கவேண்டும்.

நுகேகொடையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்க எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்பதற்கு எனக்கு தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நான் பங்கேற்கமாட்டேன். எமது கட்சியும் பங்கேற்காது- என்றார். (எ-44)

**சுபிரி தன சம்பத**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0714
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 5 3 7 0 9 7

**Super Ball DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2980
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கம் 02 09 32 53

**சனிதா DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 02 03 34 60
வெற்றி வாரம் 5141

**SASIRI DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 0810
வெற்றி இலக்கம் 01 02 23

**லக்ன ராசி DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
துலாம்
வெற்றி இலக்கம் 04 21 37 54
சீட்டிழுப்பு வாரம் 4692

**KAPRUKA DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 32
வெற்றி இலக்கம் 04 11 41 69
வெற்றி வாரம் 2156

**அத கோடிபதி DLB**
திகதி 07.11.2025 தினம் வெள்ளிக்கிழமை
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 32 37 51 72
வெற்றி வாரம் 2806



# பேரணியில் மஹிந்த பங்கேற்கார்

கொழும்பு, நவ.8

நுகேகொடவில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்க எதிர்ப்பு பேரணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பங்கேற்கமாட்டார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே இதற்குரிய நடவடிக்கை இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்புத் தொடர்பாகக் கட்சிகள் எடுக்கும் முடிவை நாம் மதிக்கின்றோம்.

நுகேகொட பேரணியில் மஹிந்த ராஜபக்ச பங்கேற்கமாட்டார். எனினும், அவரது ஆசீர்வாதம், ஆதரவு அந்தக் கூட்டத்துக்கு நிச்சயம் இருக்கின்றது. மக்களுக்காக களத்தில் இறங்கிப் போராடிய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ச. அவரின் வழிகாட்டலுடன் எமது பயணம் தொடரும். நுகேகொடை அரசியல் சமரானது அரசாங்கத்துக்கு நிச்சயம் கடுமையான அழுத்தமாக அமையும் - என்றார். (எ-44)

# வரவு- செலவுத் திட்டத்தினூடாக மாற்றம் ஏற்படச் சாத்தியமில்லை

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

வரவு - செலவுத் திட்டம் ஊடாக நாட்டில் பெரிய மாற்றம் ஏற்படும் என நம்பமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளை வழங்கியது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகுவோம் எனவும் கூளுரைத்திருந்தது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கமையவே அரசாங்கம் செயற்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் காட்டும் வழியில் பயணிப்பதால் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. அரசாங்கத்தின் போதை ஒழிப்பு நடவடிக்கைக்கு நாம் ஆதரவளிப்போம். தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவரின் கணவர் போதைப் பொருளுடன் கைதாகியுள்ளார். இப்படியான சம்பவங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை அவசியம் - என்றார். (எ-44)



# மாகாணசபைத் தேர்தலை உடன் நடத்தவேண்டும் அரசு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியை நடத்துவதற்காக அரசாங்கம் அவசரமாக மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்க் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண ஆட்சி முறைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். ஆளுநர்களின் ஆட்சியை உடன் நிறுத்தவேண்டும். எல்லை நிர்ணயத்தில் உள்ள சிக்கல்களைத் தீர்த்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். அவற்றைச் செய்யாமல் தேர்தலை இழுத்தடிக்கும் எண்ணத்தில் அரசாங்கம் செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் கூட்டமைப்பாகச் செயற்படுவதற்கு கோரிக்கை விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் அதற்காக முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் எவை என்பது இதுவரை தெரியாதுள்ளது. பேச்சுவார்த்தை ஊடாக கட்சிகள் இணைய முடியும் - என்றார். (எ-இ)

# ஹெரோய்னுடன் கைதான அதிபர் பதவிநீக்கம்

கொழும்பு, நவ.8

ஹெரோய்ன் போதைப் பொருள் கையிருப்புடன் கைதுசெய்யப்பட்ட அதிபர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஸ்தாபனக் கோவையின் சரத்துகளின்கீழ்வரும் குற்றத்தை அவர் செய்துள்ளதால் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அவர் அறிவித்துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் நகரசபை உறுப்பினர் ஒருவரின் கணவரான குறித்த அதிபர், அண்மையில் 1 கிலோ 118 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு பாடவேளையும் இனி 50 நிமிடங்கள்!

**கொழும்பு, நவ.8**
**புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் இனி ஒவ்வொரு பாடவேளையும் 50 நிமிடங்கள் கொண்டதாக 7 பாடவேளைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் பாடசாலை நேரம் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்படும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.
புதிய கல்விச் சீர்திருத்தங்களின்படி, 5ஆம் ஆண்டு முதல் உயர்தரம் வரை பாடசாலை நேரம் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நீடிக்கப்படும்.
மேலும், ஒரு பாடவேளை 50 நிமிடங்கள் கொண்டதாக 7 பாடவேளைகள் நடத்தப்படும். மேலும், இரண்டு இடைவேளைகள் வழங்குவதா அல்லது ஒரு இடைவேளை வழங்குவதா என்பதை முடிவு செய்ய பாடசாலை அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

| விடயம் | நேரம் |
|---|---|
| காலை ஒன்றுகூடல் | 07:30 AM - 07.40 am |
| 1ம் பாடவேளை | 07:40 am – 08:30 am |
| வரவு இடாப்பு | 08:30 am – 08:35 am |
| 2ம் பாடவேளை | 08:35 am – 09:25 am |
| 3ம் பாடவேளை | 09:25 am – 10:15 am |
| இடைவேளை | 10:15 am – 10:40 am |
| 4ம் பாடவேளை | 10:40 am – 11:30 am |
| 5ம் பாடவேளை | 11:30 am – 12:20 pm |
| 6ம் பா்டவேளை | 12:20 pm – 01:10 pm |
| 7ம் பாடவேளை | 01:10 pm – 02:00 pm |

அதேவேளை முதலாம் மற்றும் இரண்டாம் தரம் மாணவர்களுக்கு பழைய நேர அட்டவணைப்படியே காலை 7.30 மணி முதல் 11.45 மணிவரையிலும், மூன்றாம் மற்றும் நான்காம் தரம் மாணவர்களுக்கு மாலை 7.30 மணி முதல் பகல் 1 மணி வரையிலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## 2210 வீதி விபத்துகளில் 2343 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ.8
இவ்வருடம் ஜனவரி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 2210 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன் அவ்வாறான விபத்துகளில் சிக்கி 2343 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.
விபத்துகளால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் விசேட போக்குவரத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. கவனவீனமாகவும், மதுபோதையுடனும் வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## தொழுநோயை முற்றாக ஒழிப்பதே அரசின் இலக்கு

*சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*


கொழும்பு, நவ.8
2035ஆம் ஆண்டுக்குள் நாட்டில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கையைப் பூச்சியமாகக் குறைக்க தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
2025 ஆம் ஆண்டு தேசிய தொழுநோய் மாநாட்டுடன் இணைந்து நடத்தப்பட்ட சிறப்பு ஊடக சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
இலங்கை 1996ஆம் ஆண்டு தொழுநோயை ஒழித்தது. ஆனால் இந்தப் பயணம் இன்னும் முடிவடையவில்லை. நோயாளர்கள் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.
ஆண்டுதோறும் சுமார் 1500 முதல் 2000 வரை புதிய தொழுநோய் நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். அவர்களில் சுமார் 10 வீதத்தினர் 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளாவர் -என்றார். (எ-இ)

மாணவர்களுக்கு
## வவுச்சருக்குப் பதிலாக உள்ளூர்ப் பாதணிகள்

கொழும்பு,நவ.8
பாடசாலை மாணவர்கள் பாதணிகளைப் பெற்றுக்கொள்ள வழங்கப்படும் வவுச்சர்களுக்குப் பதிலாக தரமான, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பாதணிகளை நேரடியாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தொழில்கள் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
250 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்குத் தற்போது வழங்கப்படும் வவுச்சர்களுக்குப் பதிலாக, தரமான, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பாதணிகளை வழங்குவதற்கான முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்படும். இந்தத் திட்டம் மேல், தென் மாகாணங்களில் உள்ள ஆயிரத்து 266 பாடசாலைகளின் ஒரு லட்சத்து 45 ஆயிரத்து 723 மாணவர்களை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படும். - என்றார். (க-இ)

## விஜித ஹேரத் ரியாத் பயணம்

கொழும்பு, நவ.8
இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுற்றுலா அமைப்பின் 26 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இன்று சவூதி அரேபியாவின் ரியாத் நகருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.
இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பு நாடுகளின் அமைச்சர்களுடன் அவர் இருதரப்புச் சந்திப்புகளை நடத்தவுள்ளார். (ச-இ)




## பேர் கூட போராட்டம் தான்

**பெரும் போராட்டத்துக்குப் பிறகு இஞ்ச எடுக்கிற படத்தின்ர பேரை மாத்தியிருக்கினம். மில்லர் எண்டு பேர் வைச்சுத்தான் அந்தப் படத்தை எடுக்க வெளிக்கிட்டவை. ஆனால் அதுக்கு எல்லாப் பக்கமும் எதிர்ப்பு வரத்துடங்க, இப்பிடி முழுவியளமே எதிர்ப்பா இருந்தால் பிறகு படம் பப்படமாகிடும் எண்டிட்டு ஒருமாதிரி இறங்கி வந்து பேரை மாத்தியிருக்கினம். இந்தப் பேர் வைக்கிற பிரச்சினையே பெரும் போராட்டமா இருந்ததாலையோ என்னவோ 'போராட்டம்' எண்டு இப்ப தலைப்பை வைச்சிருக்கிறதா அறிவிச்சிருக்கினம்.**

**எந்தவொரு படத்துக்கும் இல்லாதமாதிரி ஏன் இந்தப் படத்துக்கு மட்டும் அந்தப் பேரை வைக்க வேண்டாமெண்டு எதிர்ப்பு வந்ததெண்டு பார்த்தால், அதுக்குக் காரணம் இருக்கு. இதே பேரோட படமெடுக்கப் போறம் எண்டு ரண்டு மூண்டு வருசத்துக்கு முந்தியே படமெடுக்கிறவை அறிவிச்சு, ஒரு முன்னோட்ட வீடியோவும் விட்டவை. அப்ப அதைப் பெரிசா ஒருத்தரும் கவனத்தில எடுக்கேலை. எங்கட பெடியள் எங்கட கதையை எடுக்கட்டும் எண்டு நினைச்சினம் போல. ஆனால் இப்ப அந்தப் படத்தைத் தயாரிக்கிறவர் கொஞ்சம் பசையுள்ள, அரசியல் செல்வாக்குள்ள ஆள் . அதோட இந்தியாவில நடக்கிற மாதிரி தன்ர வாரிசைத்தான் இந்தப் படத்தில ஹீரோவா நடிக்க வைக்கிறார். "என்ர மகனை ஹீரோவாப் போட்டால் படத்துக்கான முழுச் செலவையும் நான் ஏற்பன்" எண்டதுதான் அவரின்ர டீல். அதுக்கு படக்குழுவும் ஓமெண்டு எல்லா வேலையளையும் செய்யத்துடங்கிட்டினம். மகன் நடிக்கிற படம் எண்டதால தயாரிப்பாளர் விலாசம் காட்ட வெளிக்கிட்டு, இந்தியாவில இருந்து இயக்குநர்மார், நடிகர்மார் , வைரமுத்து எண்டு நட்சத்திரப்பட்டாளத்தைக் களமிறக்கி, தொடக்கவிழா நடத்தினபிறகுதான் கனபேருக்கு 'மில்லர்' எண்ட படத்தின்ர பேர் உறைச்சிருக்குது.அந்தத் தொடக்கவிழா நடந்திருக்காட்டி சிலவேளை உந்தப்பேரைப் பற்றி பெரிசா அக்கறைப் பட்டிருக்கவும் மாட்டினம்.**

**"எங்கட பெடியள் மட்டும் படமெடுத்தால் மில்லரின்ர பேருக்குக் களங்கம்வர விடமாட்டாங்கள். ஆனால் படமெடுக்கிற பெடியளின்ர கொள்கைக்கு மாறா, புறமோசனுக்காக இந்தியாவில இருந்து ஆக்களைக் கொண்டந்த தயாரிப்பாளர் பிறகு என்னென்ன விளையாட்டெல்லாம் காட்டி, மில்லர் எண்ட பேரின்ர புனிதத்தைக் கெடுத்துப்போடுவாரோ? " எண்ட பயம் கனபேருக்கு வந்திட்டு. அதாலதான் பேஸ்புக்கிலையும், யூரியூப்பிலையும் "பேரை மாத்துங்கோ" எண்டு புலம்பத் தொடங்கிட்டினம். ஒருகட்டத்தில இந்த எதிர்ப்பைச் சமாளிக்க படமெடுக்கிற பெடியள் விளக்கம் சொல்லி வீடியோ போட்டும், எதிர்ப்பு அடங்கினபாடாயில்லை. அதால எதுக்கு வீண்சோலி,பேசாமல் பேரை மாத்துவம் எண்டு பெரும் மனப்போராட்டத்துக்குப் பிறகு 'போராட்டம்' எண்டு பேரை மாத்தி, அதை அறிக்கை மாதிரி அறிவிச்சுமிருக்கினம். இதே பேரிலை இந்தியாவில இருந்தும் ஒரு படம் கொஞ்சகாலத்துக்கு முதல் வந்தது. அதுக்கு ஒருத்தரும் எதிர்ப்புக்காட்டேலை. ஆனால் எங்கடையாக்கள் எடுக்கேக்க மட்டும் ஏன் எதிர்ப்புக் காட்டுகினம் எண்ட கேள்வியுமிருக்கு. சில வேளை எங்கட விரலே எங்கட கண்ணைக் குத்தக் கூடாது எண்ட அக்கறையாலையும் இருக்கலாம் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள்மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். தாய் மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. நண்பர்கள்வகையில் திடீர்ச்செலவுகள் ஏற்படக்கூடும்.


**கும்பம்:** புதிய முயற்சிளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும்.

# சென். ஜோன் அம்புலன்ஸ்; யாழ்.இந்துவில் செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.8

சென். ஜோன் அம்புலன்ஸ் படையணியில் இவ்வருடம் இணைந்து கொண்ட மாணவர்களுக்கு இரு நாள்கள் முழுமையான முதலுதவிப் பயிற்சிச் செயலமர்வு அண்மையில் இடம்பெற்றது. சென். ஜோன் அம்புலன்ஸின் யாழ். மாவட்ட ஆணையாளர் எட்வாட் டெலிஷானின் ஆலோசனை வழிகாட்டலின்கீழ் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் நிறுவனத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளரும் சிரேஷ்ட முதலுதவிப் பயிற்றுவிப்பாளருமாகிய ஈழநேசன் பங்கேற்று மாணவர்களுக்குப் பயிற்சி வழங்கினார். இதில் 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். (ச)



# 'தூய தமிழ்ப் பெயர்கள்' நூல் அறிமுக விழா!

யாழ்ப்பாணம், நவ.8

தூய தமிழ்ப் பெயர்கள் அடங்கிய நூல் அறிமுக நிகழ்வு பருத்தித்துறை சூரியமஹால் திருமண மண்டபத்தில் இன்று சனிக்கிழமை நண்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் அமுதம் அமைப்பின் முதலாவது வெளியீடாக 46 ஆயிரம் தமிழ்ப் பெயர்களைக் கொண்டதாக இந்த நூல் அமைந்துள்ளது. நூலின் மதிப்பீட்டு உரையை யாழ். பல்கலைக்கழகக் கலைத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் ஆற்றவுள்ளார்.

பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதனை ஊக்குவிக்கும் முகமாக இந்த நூல் அறிமுகம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,100)

# நினைவுத் திருப்பலி

யாழ்ப்பாணம், நவ.8

செபமாலை தாசர் துறவு சபையின் நிறுவுநர் வ. அ. தோமஸ் அடிகளாரை நினைவு கூரும் திருவழிபாட்டுத் திருப்பலி யாழ். மறை மாவட்டத்தின் அனைத்துக் கத்தோலிக்க தேவாலயங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள செபமாலை தாசர் துறவு சபையின் அருள் ஆச்சிரமத்தில் 10ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு வ. அ. தோமஸ் அடிகளாரின் கல்லறை மண்டபத்தில் சிறப்புத் திருப்பலி இடம்பெறும். (ச-25)

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 10 . 1941



மறைவு 07 . 11 . 2025

## திருமதி துரைரத்தினம் கமலாவதி

**(ஓய்வுபெற்ற சிரேஷ்ட நெசவு மேற்பார்வையாளர், சங்கானைப் பிரதேச செயலகம்)**

வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கமலாவதி அவர்கள் நேற்று (07.11.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைரத்தினத்தின் அன்பு மனைவியும், கனகசபை - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், துரையப்பா - கண்ணாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், விஜிதா (லண்டன்), பிறிந்தா (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (லண்டன்), றஜிதா (வடலியடைப்பு), சுனிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கிருஸ்ணதாசன் (லண்டன்), சிவபாலன் (பிரான்ஸ்), சஜிதா (லண்டன்), லோகநாதன் (வடலியடைப்பு), சிவதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், டாரணி, லக்ஷ்மிகரன் (லண்டன்), யஸ்வினி (பிரான்ஸ்), தீபிகா, கவின், சர்வின் (லண்டன்), லனுஷான் - பிரியங்கா (பிரான்ஸ்), கபிஷான் - கஜலக்ஷி (வடலியடைப்பு), துஷானி (வடலியடைப்பு), சுவாதிகா, சாகித்யன், சாத்வீகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், ஆதினி (பிரான்ஸ்), சஸ்மிதா (வடலியடைப்பு) ஆகியோரின் பூட்டியும், பத்மாவதி, காலஞ்சென்ற சரவணபவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திலகரத்தினம், ஞானேஸ்வரி, இராஜேஸ்வரி, சுலோஜனாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:

+447544342128 (விஜிதா)
+33603778414 (பிறிந்தா)
+447533482674 (சுரேஸ்குமார்)
0777251250 (றஜிதா)
+33695124708 (சுனிதா)

(CS 30695) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வல்லாதிக்கத்தின் நட்பு!

"இலங்கையின் நம்பகரமான பங்காளியாக இந்தியா என்றும் துணைநிற்கும்" என்றவாறாகத் தெரிவித்திருக்கின்றார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா. வர்த்தகம், முதலீடு, சுற்றுலா என அனைத்துத் துறைகளிலும் இலங்கையுடனான கூட்டாண்மையை இந்தியா மேலும் வலுப்படுத்தும் என்றவாறாகவும் அவர் அறிவித்துள்ளார். பங்களாதேஷும், மாலைதீவும் சீனாவின் பக்கம் சாய்ந்துவிட்ட நிலையில், பிராந்திய வல்லரசு என்ற நிலையைத் தக்கவைப்பதற்கு இலங்கையின் ஆதரவும் நட்பும் இந்தியாவுக்கு மிகமிக அவசியமானது. எனவே, இலங்கையைக் குளிர்விக்கும் வகையில் இந்தியத்தூதுவரால் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துகளில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஆனால், இலங்கையைப் பொறுத்தளவில் இந்தியாவின் பிரதான கடமையும் பொறுப்பும் என்ன? என்ற கேள்விக்கு அந்த நாட்டின் நேரடிப் பிரதிநிதி என்றவகையில் பதில் தேடவேண்டிய நபராகச் சந்தோஷ் ஜா காணப்படுகின்றார்.

இலங்கையில் இனப்பிரச்சினை தீவிரம் பெற்றபோது தமிழர்களின் அரணாகவும், பாதுகாப்பாகவும் இந்தியா உள்நுழைந்தது. அமைதி காக்கும் படை என்ற பெயரில் இங்கு ஊடுருவிய இந்தியப்படைகள் பல்வேறு படுகொலைகளை நிகழ்த்தி குருதியாற்றை ஓடவிட்ட போதிலும், தமிழர்களோ அல்லது தமிழ்த் தலைமைகளோ இன்றளவும் இந்தியாவை முற்றாகப் புறமொதுக்கி விடவில்லை. தமது அரசியற்பயணத்தின் பிரதான வகிபங்கை இந்தியாவிடம் தமிழர்கள் ஒப்படைத்தனர்; ஒப்படைத்திருக்கின்றனர். ஆனால், இன்றுவரை தமிழர்களின் விடயத்தில் இந்தியா தனது கடமையை நிறைவேற்றியதாக வரலாறு இல்லை. தமிழர்களுடன் நெருக்கமாகவும் - இரண்டறக் கலந்தவாறும் -கொழும்புடன் பேரம்பேசும் பெரும் சக்தியாக இருக்கவேண்டிய இந்தியா, இப்போதெல்லாம் தமிழர்கள்தொடர்பானவிடயங்களை-விவாதங்களை-முன்னிறுத்துவதேயில்லை. இதன் தொடர்ச்சிதான் 'இலங்கையின் நம்பகரமான பங்காளி' என இந்தியத் தூதுவர் தம்மை அடையாளப்படுத்தியுள்ளமை அமைகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஈழத்தமிழர்கள் எனப்படுவோர் பிராந்தியத்தில் தன் வல்லாதிக்கத்தைப் பலப்படுத்தவும் நிலைப்படுத்தவும் தேவைப்படும் கிள்ளுக்கீரைகள் அவ்வளவே. தன் மீதான களங்கத்தை இந்தியா துடைத்தெறியவேண்டுமாயின், ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு, தன் 'ஆதாம் காலத்துப் புராணமான' 13ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்பட்ட நடவடிக்கைகளைக் கைக்கொள்ளவேண்டும். ஆனால், தமிழர்களே தமக்கான தீர்வு என்று ஏற்றுக் கொள்ளாத 13ஆவது திருத்தத்தை நிறைவேற்றக்கூடத் திராணியில்லாத இந்தியாவிடம், அதற்கு அப்பாற்பட்ட விடயங்களை எல்லாம் எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிகச் சிறந்த இருதரப்பு உறவுகள் இருக்கவேண்டும். அதில் தவறென்று குறிப்பிடுவதற்கு எதுவும் இல்லை. நிலவழியாக எந்தவொரு நாட்டுடனும் தொடர்பற்றுள்ள இலங்கையானது, இந்தியா போன்ற நாட்டுடன் நட்பாயிருப்பதுதான் பல விடயங்களில் இலங்கைக்கு அனுகூலம் விளைவிக்கும். நாடு திவால்நிலையை அடைந்தபோது, அத்தகைய நட்பின் அவசியத்துக்கு நாம் அனைவரும் கண்கண்ட சாட்சிகளாக அமைந்தோம். ஆனால், அந்த நட்புக்காக தம்மையே கதியென்று நம்பியிருக்கும் மக்கள் கூட்டத்தைப் பணயம் வைப்பது ஒவ்வாத செயல். தமிழர்களுக்குத் தீர்வை வழங்கக்கூடிய நட்புறவை இலங்கையுடன் ஏற்படுத்துவதே பாரதத்துக்கு அழகு. தமிழர்களின் நம்பிக்கையை இழந்த பின்னர், 'இலங்கையின் நம்பகரமான பங்காளியாக' இந்தியா இருப்பதால் எதுவும் ஆகிவிடப் போவதில்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



மரநடுகை நவம்பர் மாதம்

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."

– லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்) –




## 70 மில்லியன் டொலர் கடன்; இலங்கை இழக்கும் அபாயம்

### வெரிட்டே ரிசேர்ச் எச்சரிக்கை

கொழும்பு, நவ.8

**இலங்கையின் நிதித்திட்டமிடலில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக 70 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான மிக முக்கியமான கடன் நிவாரண வாய்ப்பை இலங்கை இழக்கநேரிடும் எனக் கொழும்பைத் தளமாகக் கொண்ட முன்னணிக் குழுமமான வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.**

நிர்வாகத்துடன் இணைக்கப்பட்ட கடன் பத்திரம், கடன் வழங்குபவர்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தமாகும்.

குறிப்பிட்ட இரண்டு வருவாய் இலக்குகளை இலங்கை அடைந்தால், 70 மில்லியன் டொலர் அளவுக்கு அதன் கடன் வட்டிக் கொடுப்பனவில் சலுகை அளிக்கப்படும்.

இந்தக் கடன் நிவாரணத்தைப் பெறுவதற்கான வருவாய் இலக்குகள் அரசாங்கத்தின் தற்போதைய நிதி உத்தி அறிக்கையிலுள்ள இலக்குகளைவிடச் சற்றுக் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


அரசாங்கத்தின் இலக்குகள் சமீபத்திய சர்வதேச நாணயநிதியத்தின் எதிர்பார்ப்புகளைப் பின்பற்றுகின்றன. எனவே இந்த 70 மில்லியன் டொலர் கடன் நிவாரண வாய்ப்பை இழப்பதைத் தவிர்க்க அரசாங்கம் அதன் வரவு- செலவுத் திட்டத்தில் வருவாய் இலக்குகளை உயர்த்தி, அவற்றைச் சரிசெய்யவேண்டும் என்றும் வெரிட்டே ரிசேர்ச் யோசனை முன்வைத்துள்ளது. (ச-இ)

## பேஸ்புக் மோசடி மக்கள் 'அலேர்ட்'

கொழும்பு, நவ.8

பல்வேறு பெயர்களில் பேஸ்புக் பக்கங்களை உருவாக்கி, நிதிமோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பற்றிய தகவல்களைக் கொண்ட பல்வேறுவிளம்பரங்களை வெளியிட்டு பணம் மோசடி செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. அவ்வாறு பணத்தை மோசடி செய்து வரும் குழுவை விசாரித்து வருவதாக குற்றப் புலனாய்வு பிரிவு கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது. (ச-இ)



## பேருந்து மீது மரம்வீழ்ந்ததில் ஒருவர் பலி

கொழும்பு, நவ.8

தெல்தோட்டை -கண்டி வீதியில் ஹால்வத்த பகுதியில் பேருந்துமீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

பயணித்துக்கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பேருந்து மீதே இவ்வாறு மரம் முறிந்து விழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் பேருந்தில் பயணித்த மேலும் 10 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## பதில் பிரதம நீதியரசராக துரைராஜா பதவியேற்பு

உயர்நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுப் பதவியேற்றார். பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன வெளிநாடு சென்றுள்ளதன் காரணமாக, அவர் மீண்டும் நாட்டுக்குத் திரும்பும் வரை செயற்படும்வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அத்தியாவசியப் பொருள்களின் விலை 19 வீதமாகக் குறைவு

கொழும்பு, நவ.8

அத்தியாவசியப்பொருள்கள் சிலவற்றின் விலைகள் கடந்த ஆண்டைவிடவும் இவ்வருடம் 19 வீதமளவில் குறைந்துள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். நுகர்வோர் அடிக்கடி கொள்வனவு செய்யும் 40 வகையான அத்தியாவசியப் பொருள்களின் விலைகளே, இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன. பொருள்களின் விலைக் குறைப்பை மேற்கொள்வதில் அரசாங்கம் தொடர்ந்தும் கவனஞ்செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- ஐப்பசி 23
09.11.2025
சுபநேரம் : 09.05 - 010.35
ராகுகாலம் : 04.35 - 06.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பல சரக்கு கடைக்கு பின்வரும் வேலை ஆட்கள் தேவை.

1. Sales Assistant
2. Store Keeper
3. Accountant
4. Manager
5. Packaging (பொதியிடல்)
6. Driver

வயது எல்லை : 18 - 40

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**விபரங்களுக்கு: 077 4195 209**
**077 4195 218**

(CS 30689) A

## காணி விற்பனைக்கு

A.V றோட், கொழும்புத்துறை யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள நிலப்பரப்பு 6 கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்புக்களாகவும் பிரித்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 88 05 830**

(CS 30684)A

# ஹெரோய்னுடன் மூவர் கைது

## நுகரத் தயாரான நிலையில் சிக்கினர்

யாழ்ப்பாணம் - அரியாலைப் பகுதியில், ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள கருணாரத்ன தலைமையிலான குழுவினரின் விசேட கண்காணிப்பு நடவடிக்கையின் போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மூவரும் ஹெரோய்னை நுகர்வதற்குத் தயாரான நிலையில் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் இருந்து ஹெரோய்னுடன், ஹெரோய்னை நுகர்வதற்குப் பயன்படுத்தும் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-26)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
ஆண்டு 1 இல் இருந்து A/L வரை சிறுகுழக்களாக அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள்.
குபேரன் கட்டடம், பிரான்பற்று வீதி, சங்கானை.

**Tel: 077 675 1649**

# திருமந்திரப் பெருவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், நவ.8

சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடத்தும் திருமந்திரப் பெருவிழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவ வித்தியா விருந்திச் சங்க மண்டபத்தில் தலைவர் சு.சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவக் கலாநிதி இ.சுரேந்திரகுமார், சிறப்பு விருந்தினராக வடபிராந்திய இந்து சமய கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி கௌரவ விருந்தினராக ஆனைப்பந்தி ஆன்மீக பிரசாரகர் சங்கத் தலைவி திருமதி அருள்பரன் துஷ்யந்தினி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## 33ம் ஆண்டு நினைவஞ்சலி



### சூரியர் வேலுப்பிள்ளை

அன்பின் திருவுருவே
பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை
ஏற்றி விட்டவரே......
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
அணைந்து ஆண்டுகள்
முப்பத்து மூன்று உருண்டோட
எங்கள் மனம் உங்களை தேடி நிற்கிறது

தோற்றம் 03.06.1915 மறைவு 08.11.1992

சந்தம்புளியடி,
காரைநகர். வே.சிவசுந்தரராசா

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 12 03 1934



இறைவன் அடியில் 07 11 2025

### அமரர். திருமதி. குகனேஸ்வரி சிவசரணம்
### சிற்பனை, வேலணை

யாழ். வேலணை மேற்கு. சிற்பனை 06ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாவும். வேலணை மேற்கு 8ம் வட்டாரத்தை வாழ்விடமாகவும். இல. 541/2 காலி வீதி. வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட குகனேஸ்வரி சிவசரணம் அவர்கள் 07.11.2025ம் வெள்ளிக் கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார். காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை. பொன்னம்மா தம்பதியரின்மூத்த மகளும். அமரர்களான கந்தையா. சுந்தரம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும். காலஞ்சென்ற கந்தையா சிவசரணம் அவர்களின் அன்பு மனைவியாரும். கருணநாதன் (Germany). காலஞ்சென்ற குகநாதன் (Maharaja Foods & G.T.V Enterprises). ஞானசக்தி தயாபரன் (விகடன் பிறின்டர்ஸ்). திருநாதன் (London) ஆகியோரின் தாயாரும் கலைமணி கருணநாதன் (Germany). தவமலர்குகநாதன். தயாபரன் (ஓய்வுநிலை நீதிமன்ற உத்தியோகத்தர். Vihadan Printers).சிவகலை திருநாதன் (London) ஆகியோரின் மாமியாரும். சிவகஜன் (Germany). சிந்துஜன் (Germany). யதீசன் (Germany). விஜயானந்த் (Maharaja Foods and G.T.V Enterprises). வித்தியநாத் (Maharaja Foods and G.T.V Enterprises). கோகுல்நாத் (London). சட்டத்தரணி நர்மதா கலாமோகன். Dr.விச்வநேத்திரன் (Australia). நிவேதாநந்தகுமாரன். சகிஷ்ணா (Solicitor, London). ஸ்ருதி (Biomedical Engineer. London). சாரகா (Depositary Manager, London) ஆகியோரினதும் மற்றும் சுவன்யா சிந்துஜன் (Germany). லக்ஷனா யதீசன் (Germany). மித்ரா விஜயானந்த். கலாமோகன் (Arunthathee (Pvt) Ltd). நிரோஜினி விச்வநேத்திரன் (சட்டவிரிவுரையாளர். Australia). நந்தகுமாரன் (Assóciate Engineering Manager, Virtusa (Pvt) Ltd.) ஆகியோரினது பேர்த்தியும். வேல் (Germany). ஆதியா. அப்சரா. அட்சயன். நேத்ரா (Australia). உத்திரா ஆகியோரினது பூட்டியும். காலஞ்சென்ற விஸ்வநாதன் மற்றும் இராசலட்சுமி கனகரத்தினம். மோகனதாஸ் (சிவசக்தி ஸ்டோர்ஸ். செட்டித்தெரு). சரஸ்வதி சரவணபவானந்தன் (Canada) ஆகியோரின் அன்புச்சகோதரியும். காலஞ்சென்ற பகவத்சிங்கம் அவர்களின் அண்ணியாரும். காலஞ்சென்றவர்களான திலகவதி விஸ்வநாதன். கனகரத்தினம், ரதி மோகனதாஸ். சரவணபவானந்தன் ஆகியோரின் மைத்துனியும். மகேஸ்வரி பகவத்சிங்கம் அவர்களின் சகலியும் ஆவார்.

**அன்னாரின் பூதஷுடல் இறுதி அஞ்சலிக்காக அன்னாரின் இல்லத்தில் 08.11.2025 மற்றும் 09.11.2025 ம் திகதிகளில் வைக்கப்பட்டு. 09.11.2025ம் திகதி மதியம் 01.30 மணியளவில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**


**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல் : பிள்ளைகள் பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்
இல. 541/2 காலி வீதி, வெள்ளவத்தை.

தயாபரன் 0775586765, விஜயானந் 0766908990
வித்தியநாத் 0777407299

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 08 - 1945



மறைவு 06 - 11 - 2025

### சின்னத்துரை விமலநாதன் (விமலன்)

யாழ் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விமலநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (06.11.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சொர்ணம் தம்பதியரின் அன்பு மகனும், நவமலர் (நவம்) அவர்களின் அன்புக் கணவரும், சிவாம்பிகை (சாந்தம்), தனலட்சுமி (தனம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிஐயா, சமரக்கொடி இன் மைத்துனரும், கணேஷ்குமார், செந்தில்குமார், உமா, அகிலா, வித்ஜா, சோபிதா, மதுரிகா, நிறூஜா, சுவர்ணதாஸ், சுவர்ணா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11..2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**தகவல்:**
**சமரக்கொடி (மாஸ்டர்)**
**மைத்துனர்**
**075 249 9088**

**அம்பனை**
**தெல்லிப்பளை**
**மகாஜனக் கல்லூரிக்கு அருகில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 10 . 1939



மறைவு 07 . 11 . 2025

### நமசிவாயம் திருநாவுக்கரசு (தில்லையம்பலம்)

மலேசியா BENTONG ஐ பிறப்பிடமாகவும் காரைநகர் பயரிக்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் திருநாவுக்கரசு (தில்லையம்பலம்) அவர்கள் நேற்று (07.11.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கந்தையா - இராசம்மா தம்பதியரின் மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், நடராசாவின் பாசமிகு சகோதரரும், பரமேஸ்வரன் மேதினி, நமசிவாயம், தயாபரன், பேரரசி, காலஞ்சென்ற கல்யாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாளினி, வைகுந்தநாதன், இதயகுமாரி, சுதர்சினி, அருலேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாரோஸ், பிரவீன், சோபிகா, நவீன், கஜீவன், தனுஜன், சுவேதகா, ஆதித், வருன், ஆன்யா, அரன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வரத்தினம், வைத்திலிங்கம், சுந்தரம்மா, லோகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
074 0751 040
077 7771 379

(CS 30685) A

## கேள்வி அறிவித்தல்
### நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
### சபை நிதி - 2025
### Tipper வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல்


01. **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விக்கான விலை மனுக்கள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட பொருட்கள் கொள்வனவிற்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** , (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 10.11.2025 திகதியிலிருந்து 2025.11.24 ஆம் திகதி வரை மேற்கூறிய அலுவலகத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** அலுவலகத்தில் 10.11.2025ஆம் திகதியிலிருந்து 24.11.2025ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்,** எனும் முகவரிக்கு 25.11.2025ஆம் திகதி மு.ப11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்கள் (26.01.2026) வரையும் செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09. கேள்வி முன்னாயத்த கூட்டம் 18.11.2025(செவ்வாய்க்கிழமை) மு.ப 11.00 மணிக்கு சபையின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம்பெறும்.

| ஒப்பந்த இலக்கம் | பொருட்களின் விபரம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NPS/Tipper Service/2025 | நல்லூர் பிரதேச சபையினால் கால்வாய்களில் அகழ்வு செய்யப்பட்ட மண் மற்றும் தரம்பிரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை ஏற்றியிறக்குவதற்காக Tipper வாகனங்களை வாடகைக்கு அமர்த்தல் | வியாபாரப் பதிவுச் சான்றிதழ் உள்ள நிறுவனமாக இருத்தல் | 35,000.00 | 26.01.2026 |

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.

2025.11.08

## மரண அறிவித்தல்



தோற்றம் 02.06.1952
மறைவு 06.11.2025

### திருமதி இராசதுரை புனிதவதி

வேலணை வடக்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை புனிதவதி கடந்த 06.11.2025 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - நித்தியலெட்சுமி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற நாகநாதபிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசதுரை அவர்களின் அன்பு மனைவியும், பிரதீபன் (லண்டன்), பிரதீபா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிஷாந்தன் (கனடா), அஞ்சனா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், தர்மாவதி (கனடா), காலஞ்சென்ற சிவகலை (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அவினாஷ் (கனடா), ஆதித் (கனடா), றியான் (கனடா), டிஷான் (கனடா) ஆகியோரின் பாட்டியும், காலஞ்சென்ற இராசம்மா, கமலாம்பிகை (கனடா) ஆகியோரின் பெறாமகளும், நாகராசாவின் மருமகளும், தனபாலசிங்கம் கஜேந்திரன், சியாணி குமார் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.11.2025), 08.11.2025 ஆகிய இருதினங்கள் அவரது கொழும்பு இல்லத்தில் அஞ்சலிக் காக வைக்கப்பட்டு 09.11.2025 ஞாயிறு காலை சொந்த ஊரான வேலணைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இறுதிக்கிரியைகள் நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
மகன் - பிரதீபன்
மகள் - பிரதீபா
மருமகன் கிஷாந்தன்

(CS 30682) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## J.D,C.S.I - Cathedral Nursery Vacancy - Preschool Teacher

Cathedral Nursery invites applications from qualified and experienced candidates for the post of Nursery Teacher.

**Requirements:-**

- Diploma/Certificate in Early Childhood Education or equivalent qualification
- Fluency in English and Tamil
- Previous experience in teaching young children will be an advantage
- Caring, patient, and creative personality with good communication skills

**Responsibilities:-**

- Conducting nursery-level classes in a child-friendly and engaging manner
- Preparing and delivering age-appropriate learning activities
- Ensuring the safety and well-being of children under care
- Supporting the overall development of young learners

An attractive remuneration package will be offered to the selected candidate.


Please send your application with contact details of two non-related referees to The Presbyter, Cathedral Church, Vaddukoddai.

**Applications should reach us on or before November 14th, 2025.**
**Only short-listed candidates will be notified.**

The Rev. Sathees Daniel
Presbyter in Charge/Secretary - J.D,C.S.I

**Parsonage, Cathedral, Vaddukoddai, Jaffna, Sri Lanka.**
**Mob: +94 77 505 9909. Email: secretaryjdcsi@gmail.com.**
**Website: www.jdcsi.in.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 11 . 1946

மறைவு 03 . 11 . 2025

### சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர்

**(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர், வீதி அதிகாரசபை)**

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும், 211/30 கோயில் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் அவர்கள் கடந்த (03.11.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் மருமகனும், செல்வாவின் அன்புக் கணவரும், துஷாந், துஷாந்தினி, துளசி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், ராஜசுந்தரம் (ராஜன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் ஜெகதீசன் (சோதி) ஆகியோரின் மைத்துனரும், பிர்த்தி, டிபிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், பிரசாளினி, நீபதரன், வரயாழினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**தகவல்: குடும்பத்தினர்**

**211/30 கோயில் வீதி, நல்லூர்.**

**077 451 0179 - மகள் (துளசி)**
**077 242 7902 - மைத்துனர் (சோதி)**

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம:"

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 08 . 1927

மறைவு 06 . 11 . 2025

### அமரர் ஐயம்பிள்ளை நடராசா (பெரியண்ணா)

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை நடராசா அவர்கள் கடந்த 06.11.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - பரிமளம் தம்பதியரின் மூத்த மகனும், நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற நல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, கனகம்மா, இராசாத்தியம்மா மற்றும் இரத்தினம், தர்மலிங்கம் (ஐயாண்ணை), இராசதுரை, குணசிங்கம், இராணியம்மா அவர்களின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகநாதன், தயாநாதன், செந்தில்நாதன், சுகுணா, ரவீந்திரன் மற்றும் சரோஜாதேவி, கமலநாதன், ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சாந்தி, பற்குணசிங்கம், மோகனா, பத்மலீலா, மதிச்சந்திரன், காலஞ்சென்ற குகப்பிரகாசம் ஆகியோரின் மாமனாரும், தயான், நிஜன், கிரிதரன், சோபிகா, தர்சன், ஷர்மினி, துஷ்யந்தன், மயூரதி, செந்தூரன், மதுரன், தனுசன், லாவண்யா, மதுஜா ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (09.11.2025) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக புத்தூர் அந்திராணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 706 3395**

(CS 42291 E)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 06 . 1952

மறைவு 12 . 11 . 2022

### அமரர் கந்தையா தவபாலசந்திரன்

**(பேக்கரி ராசன்-செல்வம் பேக்கரி)**

திதி: தேய்பிறை சதுர்த்தி

**மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில்**
**மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்**
**ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்**
**குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்விற்காய்**
**பாடுபட்டுப் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த**
**எம்முயிர்த் தெய்வமே!**
**விண்ணுலகம் சென்று மூன்றாண்டுகள் ஆனாலும்**
**உங்கள் பிரிவுத்துயர் எம் நெஞ்சை விட்டகலவில்லை**
**நீங்காத நினைவுகளுடன்**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்**
**பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**சோளங்கன், கரணவாய் மேற்கு, கரவெட்டி**

**நினைவுடன்... குடும்பத்தினர்.**

(CS 59848) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான நிகழ்வு

வலி.கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பின்ரும், சமாதான நீதவானுமான அமரர் இலகுநாதன் செந்தூரனின் பிறந்த தின நினைவை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு கோப்பாய் வடக்கு நாவற்காடு வீதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறுமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-25, 17)

## 30 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில், தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த மாதம் கைதுசெய்யப்பட்ட 30 இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையுடன் தண்டமும் விதிக்கப் பட்டது.

குறித்த வழக்கு விசாரணை, மன்னார் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது முதலாம் மற்றும் இரண்டாம் குற்றச்சாட்டுக்களுக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 12 மாதங்கள் சிறைத் தண்டனையும், மூன்றாவது குற்றச்சாட் டுக்கு 26 மீனவர்களுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

அதேவேளை ஏற்கனவே இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றால் நிபந்தனை யுடன் விடுவிக்கப்பட்டவர்களில் நால்வர் மீண்டும் கைதுசெய்யப்பட்டமையால் அவர்களுக்கு தலா 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட நான்கு படகுகளின் உரிமையாளர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 19ஆம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும், படகு தவிர்ந்த ஏனைய சான்றுப்பொருள்களை அரச உடமையாக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். (க-56)

## திருமந்திரப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ. 9

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்ட திருமந்திர மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சு.சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி மருத்துவ கலாநிதி இ.சுரேந்திரகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ம)

பருத்தித்துறையில்

## கொட்டித் தீர்த்த மழை; 4 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ.8

பருத்தித்துறையில் நேற்று அதிகாலை கொட்டித்தீர்த்த மழை காரணமாக நான்கு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை மணி முதல் இடியுடன் கூடிய மழை கொட்டித்தீர்த்தது. தாழ்நிலப் பகுதிகளில் மழை வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/400 கிராம அலுவலர் பிரிவில் திக்கம் பகுதியில் நான்கு குடும்பங்கள் பாதிக்கப்பட்டதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தெரிவித்தார். (ச-100)


## மரண அறிவித்தல்

தோற்றம் 26 • 11 • 1946



மறைவு 07 • 11 • 2025

### சிவறாஜசிங்கம் பத்மயோகன்

(ஓய்வுபெற்ற இறைவரித்திணைக்கள வருமானவரி உத்தியோகத்தரும், S.V. முருகேசு நிறுவனத்தின் கணக்காளரும்)

கிராமக்கோடு, புலோலி மேற்கு, புலோலியை பிறப்பிடமாகவும், இல 22/19, விதானை வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவறாஜசிங்கம் பத்மயோகன் அவர்கள் (07.11.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவபாலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவறாஜசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவறாஜா - அரியமலர் அவர்களின் அன்பு மருமகனும், சரணியாவின் தந்தையும், வரதீசனின் மாமனாரும், காலஞ்சென்ற பராசக்தி, காலஞ்சென்ற பரயோகஜெயம், காலஞ்சென்ற பரராசசேகரம் மற்றும் பரமேஸ்வரி, பரராஜசிங்கம், பருவதாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவறாஜேஸ்வரன், சிவகுமாரி, சிவகுமார், சிவறாஜகுமார், சிவயோகமலர் (சத்தியா), சிவறாஜமலர், சிவயோகராஜா, சிவஜயந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10:00 மணியளவில் இல 22/19 விதானையார் வீதி, சுண்டிக்குளி இல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 14.01.1971 மறைவு 05.11.2025

### நமசிவாயம் ஸ்ரீவரதன்

புங்குடுதீவு 4ம் வட்டாரம் காளிகோயிலடியை பிறப்பிட மாகவும் இல.58, நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஸ்ரீவரதன் அவர்கள் கடந்த 05.11.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் கிருஸ்ணாம்பாள் அவர்களின் அன்பு மகனும், ஸ்ரீதரன் (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), ஸ்ரீபவன் (பிரான்ஸ்), ஸ்ரீகுகன் (பிரான்ஸ்), ஸ்ரீவாமன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயகுமாரி (ஜேர்மனி), சந்திரலேகா (பிரான்ஸ்), சிவமாலினி (பிரான்ஸ்), மதுஜா (இலங்கை), கோகுலராணி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஜெசிதன், அஜய், அபிஸ்னன் ஆகியோரின் சித்தப்பாவும், கிரிசாந், மதுசாந், அரிஷ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.58, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

தொலைபேசி:
077 48 64 406 (தாயார்)
0049 178 6717630
0033 771 01 12 28
0033766340533
0033781150717
0033065216116

CS 306911 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் குடும்பம் கனடாவில் கொலை; குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை

2024 ஆம் ஆண்டில் கனடாவின் ஒட்டாவாவில் உள்ள ஒரு வீட்டில் இலங்கைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட 6 பேரைக் கொலைசெய்த சம்பவத்தின் குற்றச்சாட்டுக்கு உள்ளான இலங்கையைச் சேர்ந்த இளைஞருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த உத்தரவைப் பிறப்பித்த நீதிமன்றம், தண்டனையில் எவ்விதமான தளர்வையும் பெறுவதற்கோ அல்லது விடுதலை பெறுவதற்கோ அவர் 25 ஆண்டுகள் கட்டாயமாகச் சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்தக் கொலையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயான தர்ஷனி பண்டாரநாயக்க (வயது–35), இனூக்க விக்கிரமசிங்க (வயது–7), அஷ்வினி விக்கிரமசிங்க (வயது–4), ரினியானா விக்கிரமசிங்க (வயது–2), கெலி விக்கிரமசிங்க (2 மாதம்) மற்றும் அந்த வீட்டில் இருந்த காமினி அமரகோன் (வயது–40) ஆகியோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச–இ)

**வரலாறு குழு வகுப்புக்கள்**
**(06-O/L, A/L)**
மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப தனியாகவோ, குழுவாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான்.
(10 வருடக் கற்பித்தல் அனுபவம்)
T.P: 077 482 5438
(CS 59842) A

**அலுவலக உதவியாளர் தேவை**
ஆங்கிலம் தேர்ச்சி உள்ள அலுவலக பெண் உதவியாளர் சட்டத்தரணி ஒருவருக்கு தேவை. அச்சுவேலியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 480 4239
(CS 59836) E

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.08.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 20.11.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 21.11.2025 மற்றும் 22.11.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
| --- | --- |
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

PEOPLE'S BANK
Pride of the Nation

# பஸ் தரிப்பிடம் திறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 8


இணுவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், அண்ணா தொழிலதிபர் அமரர் லயன் பொ. நடராஜா ஞாபகார்த்த பேருந்துத் தரிப்பிடத் திறப்பு விழா இணுவில் கோயில் வாசலில் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ம.காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பேராசிரியர் வ.மகேஸ்வரன், பேராசிரியர் க.தேவராஜா, வலி தெற்குப் பிரதேசசபை தவிசாளர் தி.பிரகாஷ், லயன்ஸ் வலயத் தலைவர் செ.சிவலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவர். சமூகச் செயற்பாட்டாளர் ப.ஜசிந்தன் நன்றியுரையாற்றுவார். நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச–25)

**விற்பனைக்கு**
காரியாலயத்தில் பாவித்த தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு பெட்டகங்கள் விற்பனைக்கு உண்டு.
இடம் : இல. 160, K.K.S Road, சுன்னாகம்.
திகதி : 10 - Nov - 2025 - 14 - Nov - 2025 வரை
நேரம் : 9.00 am - 4.00 pm வரை.
தொடர்புகளுக்கு:-
விக்னேஸ் : 077 732 3585
(CS/59851) J-1

## இவ் உலகில் எமக்கு கிடைத்த மிகப் பெரிய பொக்கிஷம் எமது தாய் தந்தையர்

**26ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 15 . 01 . 1920
மறைவு 30 . 03 . 1999

**வல்லிபுரம் குலசேகரம்பிள்ளை**

**30ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 12 . 01 . 1937
மறைவு 08 . 11 . 1995

**குலசேகரம்பிள்ளை ஈஸ்வரி**

இனி ஒரு ஜென்மம் வேண்டும் - என்று
எண்ணியதில்லை - ஆனால்
அவ்வாறு நிகழ்ந்தால் மறுபடியும் உங்கள்
பிள்ளைகளாக பிறக்கும் வரம் மட்டும் போதும்
ஐயா, அம்மா

இல. 04, இராஜ வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டிகள்.

(CS/59846) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1,757...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று முன்வைக்கப் பட்டது. இதன்படி, வரி, மானியங்கள் உள்ளடங்கலாக மொத்த வருமானமாக 5 ஆயிரத்து 300 பில்லியன் ரூபா மதிப் பிடப்பட்டுள்ளது. மீண்டெழும் செலவி னம், வட்டி உட்பட மொத்த செலவின மாக 7 ஆயிரத்து 57 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய ஆயிரத்து 757 பில்லியன் ரூபா பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இந்த நிதிப் பற் றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 5.1 சதவீதமாக இருக்கும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் 4 - 5 சதவீத பொருளா தார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. அரச வருமானம் மொத்தத் தேசிய உற் பத்தியில் 15.3 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

2028ஆம் ஆண்டில் வெளிநாட்டு கட னைப் பெறுவதற்குரிய இயலுமையை இலங்கை பெறும் என நம்பிக்கை வெளி யிடப்பட்டுள்ளது. உற்பத்தி பொருளாதா ரத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங் களும் உள்ளன. நிதி அமைச்சுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்தபடியாக பாதுகாப்பு அமைச்சுக் கும், சுகாதார அமைச்சுக்கும் நிதி ஒதுக் கப்பட்டுள்ளது.

பட்ஜெட் தொடர்பில் ஜனாதிபதி நீண்டநே ரம் உரையாற்றி இருந்தாலும், புதிய அரசியலமைப்பு மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எதுவும் குறிப்பிடவில்லை என எதிரணி சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-44)

## பட்ஜெட்...

பினர் கபீர் ஹாசீம் ஆகிய இருவரில் ஒருவர் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றவுள்ளனர்.

பட்ஜெட் மீதான இன்றைய விவாதத்தின் போது, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெ டுப்பு நவம்பர் 14ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும். குழு நிலை விவா தம் நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசெம் பர் 5ஆம் திகதி வரை 17 நாள்கள் நடை பெற்ற பின்னர், மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறும். (அ-ம-44)

## தேர்தல்...

தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் மாகாணசபை களுக்குத் தேர்தல் முறைமையும் இருக்க வில்லை. தேர்தலை நடத்த நிதியும் இருக்கவில்லை. ஆனால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு முன்மொழிந்துள்ளேன். தேர்தலை நடத் துவதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் மாகாணசபைத் தேர்தலை நடத்தும் முறைமை இல்லை. அதனை ஜனாதிபதி தீர்மானிக்க முடியாது. அவ் வாறு செய்தால் அது சர்வாதிகாரம். ஆகவே, நாடாளுமன்றம் ஊடாகச் சட் டத்தை இயற்றித் தாருங்கள். கட்சித் தலைவர்கள் இணைந்து பொருத்தமான தேர்தல் முறைமை குறித்து முடிவெடுக்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## உயர்ந்தது...

வால் அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித் துள்ளார்.

நேற்றைய பட்ஜெட் உரையின்போதே இந்த அறிவிப்பை அவர் விடுத்துள்ளார். 'குறைந்த வருமானம் பெறும் குடும்பங் களை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் களின் நலன்களைக் கருத்திற்கொண்டு மஹாபொல கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. அத் துடன், தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான கொடுப்பனவும் 2 ஆயிரத்து 500 ரூபா வால் அதிகரிக்கப்படும். விசேட தேவையு டைய பிள்ளைகள் உயர் கல்வியைப் பெறுவதற்காக மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும்' என்றும் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## 3 குழந்தைகளைப்...

பிரசவித்த பின்னர் சுகவீனம் காரண மாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி வதிரிப் பகுதி யைச் சேர்ந்த யோகராஜா மயூரதி (வயது -46) என்ற பெண்ணே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் கடந்த மாதம் 7ஆம் திகதி மூன்று குழந்தைகளைக் குறித்த தாய் பெற் றெடுத்துள்ளார். இதன் பின்னர் சுகவீன முற்று தொடர்ச்சியாக மருத்துவக் கண் காணிப்பில் இருந்துவந்த அவர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். கிருமித்தொற்றுக் காரணமாக இறப்புச் சம்பவித்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. எனினும், இறப் புக்கான காரணங்கள் தொடர்பில் உறு தியாகத் தெரியவராத நிலையில் உடற் கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தத் தாய் பிரசவித்த குழந்தைகள் மூவரும் நலமாக உள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. திருமணம் செய்து மிகநீண்ட காலத்தின் பின்னர் குழந்தை களைப் பெற்றெடுத்த பெண் உயிரிழந் துள்ள விடயம் வதிரிப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26-66)

## நீதிமன்ற...

வாக்குறுதிக்கு முரணானது என்றும் அந் தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் இலங்கைத் தமிழர சுக் கட்சியின் காங்கேசன்துறை தொகு திக்கிளை நிர்வாகம் இயங்கிவரும் நிலை யில், ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி புதிய நிர்வாகமொன்று தெரிவு செய்யப்பட்டி ருந்தது. அந்தப் புதிய நிர்வாகத் தெரி வுக்கு எதிராகவே மேற்படி கடிதம் அனுப் பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கட்சித் தலைமைக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்ளதாவது:-

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கட்சியின் பொருளாளர் கனகசபாபதி மற்றும் கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோரின் முன்னிலை யில் 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி மாவிட்டபுரம் கட்சி அலுவலகத்தில், காங்கேசன்துறைத் தொகுதிக் கிளைப் பொதுக்கூட்டம் நடை பெற்று நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இந்த பொதுக் கூட்டத்துக்கு 16 மூலக்கி ளைகளின் பிரதிநிகள் கலந்துகொண்ட னர். 20ஆம், 21ஆம், 17ஆம், 13ஆம், 6ஆம் வட்டாரங்களில் மூலக்கிளைகள் இல்லாத காரணத்தால் அவற்றில் இருந்து எவரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இவ்வாறிருக்கையில், கட்சியின் யாப்பு விதிமுறைகளை மீறி கடந்த மாதம் 21ஆம் திகதி பதில் தலைவர் மற்றும் பதில் பொதுச்செயலாளர் முன்னிலை யில் கட்சியின் ஒரு சில உறுப்பினர்க ளையும், தொகுதிக் கிளை அங்கத்தவர் களாவதற்கு தகுதியற்ற பலரையும் அழைத்து கூட்டம் நடைபெற்றுள்ளது என்றும், இதன் தொடர்ச்சியாக நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது எனவும் அறி கின்றோம்.

இந்தக் கூட்டம் தொடர்பாக காங்கேசன் துறைத் தொகுதிக் கிளை உறுப்பினர்க ளுக்கும், நிர்வாகசபை உறுப்பினர்க ளுக்கும், மூலக்கிளை உறுப்பினர்களுக் கும் எந்தவொரு அறிவித்தலும் விடுக்கப் படவில்லை. அத்துடன், தமிழரசுக் கட்சி யின் அங்கத்தவர் பட்டியலுக்கு பொறுப் பாகவுள்ள பொருளாளர் மற்றும் மாவட் டத் தலைவரான கனகசபாபதி, கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகி யோருக்குக்கூட அழைப்பு விடுக்கப்பட்ட தாகத் தெரியவரவில்லை.

எனவே, இந்தப் புதிய நிர்வாகத் தெரிவா னது அடிப்படை ஜனநாயகக் கோட்பாடு களை மீறி, போதிய கோரம் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு கட்சியின் பாரம்பரியத்துக் கும் அதன் உன்னதமான யாப்புக்கும் பங்கம் விளைவித்துள்ளது.

கட்சியில் ஏற்பட்டுள்ள உட்பூசல்களைத் தீர்த்து, ஜனநாயக முறையிலும் யாப் புக்கு அமைவாகவும் நிர்வாகத் தெரிவு மேற்கொள்ளப்படும் என கட்சியின் பதில் தலைமை நீதிமன்றத்துக்கு வாக்குறுதி வழங்கியுள்ளது. எனவே, கட்சியின் பதில் தலைமையால் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியும் தற்போது மீறப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான செயற்பாடு களுக்கு இடம் கொடுக்காமல், தமிழர சுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் 2023ஆம் ஆண்டுமுதல் இயங்கிவரும் நிர்வாகத் தைத் தொடர்ந்தும் செயற்பட அனுமதிக்குமாறும், அதற்கு ஒத்து ழைப்பு வழங்குமாறும் கேட்கின்றோம் - என்றுள்ளது. (அ-ம-எ-26)

## வடக்கு...

ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது.

இதைவிட, வீடற்ற பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள அனைத்து மக்களுக் கும் உதவும் வகையில் 27 ஆயிரம் வீடு களை அமைக்கவும் அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது. குறைவருமானம் உள்ள குடும்பங்களின் நலன்கள் தொடர்பில் இதில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள் ளது. (அ-ம-44)

## யாழ்...

மலை ஆகிய உள்நாட்டு விமான நிலை யங்களின் செயற்பாட்டை விரிவுபடுத்த வும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டை மேம்படுத் தவும் அரசாங்கம் அண்மைக்காலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின் றது. இதன் தொடர்ச்சியாகவே அந்தப் பணிகளுக்காக ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## ஊழலில்...

ராக அனைவரும் அணி திரளவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அண்மைக்கால மாகத் தெரிவித்து வருகின்றன. தன்னை 'ஹிட்லர்' என்று அழைக்கும் தரப்பின ருக்கு ஜனாதிபதி அநுர நேற்றைய பட் ஜெட் உரையில் பதிலடி கொடுத்தார்.

இதன்போது, ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டம் அமுலாகும்போது, 'ஹிட் லர் வந்துவிட்டார்' என்று சிலர் கூறிக் கொள்கின்றனர். நான் ஹிட்லர் என் றால், எதிரணியில் யார் ரஷ்யா? யார் அமெரிக்கா?. ஹிட்லரைத் தோற்கடிப்ப தற்காக அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றிணைந்தது வரலாற்றுக் கதை. அது உலக அரசியலில் முக்கியமான திருப்புமுனை. ஆனால், எதிரணிகள் எப்படியான வரைவிலக்கணத்தை வழங் கினாலும் ஊழலுக்கு எதிரான எமது போரைக் கைவிடமாட்டோம் - என்றார். (அ-ம-44)

## பொய்கள்,...

நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களி டம் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தா வது:-

இன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் யதார்த்தத்தை புரிந்துகொண்டு முன்வைக்கப்பட்ட திட்டமாக அமைய வில்லை. நாட்டு மக்கள் இன்று பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். வறுமையும் வேலையின் மையும் அதிகரித்துள்ளன. நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட பங்களிப்பை வழங்கும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் களைப் பாதுகாப்பதற்கு பட்ஜெட்டில் எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. இந்த வரவு செலவுத் திட்டமானது ஏமாற் றங்களும் பொய்களும் நிறைந்ததாக அமைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் தன்னை அட மானம் வைத்துள்ளது என்பதை பட்ஜெட் மூலம் காணக்கூடியதாக உள்ளது - என் றார். (அ-ம-44)

## 2026ஆம்...

போதே, இந்தத் தகவலை வெளியிட்டார். 2026ஆம் ஆண்டின் ஜூன் மாதம் செப் ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதி யில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன இறக்குமதி தொடர்ந்தால் இலங்கை ரூபா பாதிப்படையும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.8
வாகனங்கள் தொடர்ச்சியாக இறக்குமதி செய்யப்படுமாயின் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு தாக்கம் ஏற்படக்கூடும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அரசாங்க நிதி தொடர்பான குழுவிடம் அறிவுறுத்தியுள்ளார்.
இதுதொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளதாவது- எதிர்காலத்தில் தொடர்ச்சியாக வாகனங்கள் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படலாம். வாகன இறக்குமதியாளர்கள் தொடர்ச்சியாக வாகனங்களை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கலாம், அதனால் இலங்கை ரூபாவின் பெறுமதிக்கு பெரும் தாக்கம் ஏற்படும். அரசாங்கத்தின் நடைமுறைக் கணக்கில் பெரும் பற்றாக்குறையும் உருவாக்கப்படும்.
பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து சுயமாக மீட்சி பெறும் இலங்கை போன்ற நாட்டுக்கு இவ்வாறான நிலைமை ஆபத்தானதாகும். வாகன இறக்குமதியால் டொலர் பெருமளவு வெளியேற்றப்படுகின்றது. இலங்கையில் வெளியேற்றப்படும் டொலரைவிட உள்வரும் டொலரில் பெரும் வேறுபாடு உள்ளது. டொலரில் ஏற்படும் பற்றாக்குறையை நிவர்த்திக்க கடன் வாங்க வேண்டும்.
இன்றைய சூழலில் கடன் பெற்றுக் கொள்ளவும்முடியாது. இவ்வாறான காரணங்களால் ரூபாவின் பெறுமதிக்கும் பெரும் தாக்கம் ஏற்படலாம். வாகனக் குத்தகை யில் கடந்த மூன்று மாதங்களில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன. வாகன இறக்குமதிகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டால் மேலும் குத்தகையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் - என்றார். (எ-இ)

# மருந்துப் பற்றாக்குறையைத் தீர்க்க இந்தியாவின் ஆதரவு அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



கொழும்பு, நவ.8
இலங்கை மருத்துவத் துறையில் நிலவும் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறைக்குத் தீர்வு காண இந்திய அரசு ஆதரவு வழங்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் ஜெகத் பிரகாஷ் நட்டாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தியா சென்றுள்ள நிலையில், ஜெகத் பிரகாஷ் நட்டாவைப் புதுடில்லியில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
இலங்கையின் தேசிய சுகாதாரக் கட்டமைப்பினூடாக பல தசாப்த காலமாக இலவச சுகாதார வசதிகள் வழங்கப்பட்டபோதும், தற்போது அத்தியாவசிய மற்றும் உயிர்காக்கும் பல மருந்துகளின் பற்றாக்குறை, அவற்றைப் பயன்படுத்தும் இலட்சக்கணக்கான மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது என்று சஜித் பிரேமதாஸ கலந்துரையாடலில் சுட்டிக்காட்டினார்.
ஒரு சில மருந்துகள் தனியார் துறையினூடாக மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியுமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர், அரச மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் இந்தச் சவாலை வெற்றிகொள்வதற்காக இலங்கைக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும், இந்தியா வழங்கும் அவ்வொத்துழைப்பை மரியாதையுடன் வரவேற்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மனைவியைத் தாக்கிவிட்டு முதியவர் உயிர்மாய்ப்பு!

## முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, நவ. 8
தனது மனைவியைக் கோடரியால் தாக்கிய முதியவர், கிணற்றுக்குள் குதித்து உயிர் மாய்த்துள்ளார். படுகாயமடைந்த அந்த மூதாட்டி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவு - குமுழமுனைப் பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 75 வயதுடைய குறித்த முதியவருக்கு அண்மைய நாள்களாக மனநிலைப் பாதிப்பு ஏற்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. இதையடுத்தே அவர், 73 வயதுடைய தனது மனைவி மீது கோடரியால் கொடூரத் தாக்குதல் நடத்திவிட்டு கிணற்றுக்குள் குதித்துள்ளார்.
வெளிநாட்டில் வசித்துவந்த அவர்களின் மகன் இந்தச் சம்பவத்தை கண்காணிப்புக் கமராக்களில் தற்செயலாகக் கண்டுள்ளார்.
இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் அவர் உறவினர்களுக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து முதியவரின் சடலம் மீட்கப்பட்டது.
அத்துடன், கணவனின் தாக்குதலால் காயமடைந்த மூதாட்டி முல்லைத்தீவு - மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம)


## தென்னிந்திய யாத்திரை

ஆரம்பத் திகதி : 07.12.2025

தமிழ்நாடு,ஆந்திரா,பாண்டிச்சேரியுடனான யாத்திரை
யாத்திரிகர்:10 நாட்கள்:12

Amount 250,000

தரிசிக்கும் இடங்கள் : உச்சிப்பிள்ளையார்,மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர்,திருப்பதி,ஸ்ரீரெங்கம்,சமயபுரம்,பிரம்மாகோயில், இராமேஸ்வரம்,பழனி,திருத்தணி.திருப்பரம்குன்றம், திருச்செந்தூர்,சிதம்பரம்,ஏகாம்பரேஸ்வரர்,காலகஸ்தி, திருவெண்ணாமலை,சுவாமிமலை,பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல்,மேல்மருவத்தூர்,தஞ்சாவூர், நவபாஷாணம்,சூரியன்,சந்திரன்,சுக்கிரன்,புதன்,வியாழபகவான், செவ்வாய்,ராகு,கேது,சனி பகலான்,திருநள்ளாறு,நளன்குளத்தின் நீராடல்,தோணியப்பர்,மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர்,வடபழனி முருகன், உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன்மெரீனாபீச்,பாண்டிச்சேரி பீச்,MGR ஜெயலலிதா,அண்ணா சமாதிகளையும் அப்துல் கலாமின் மணிமண்டபமும், பார்க்கலாம்.

**சென்னையின் ஒரு நாள் Shopping**

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு,குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள்,AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும எமது சேவை.

தொடர்புகளுக்கு: கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்:ராஜன்
59,3/6,செட்டியார் தெரு,கொழும்பு - 11.
srianganathan1944@gmail.com,sriranganathan2601@gmail.com
Tel: 077 7362154



## புதுக் கடை திறப்பு விழா

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில், நாவலர் மடம் கரணவாய் கரவெட்டி என்னும் முகவரியில்

**'நியூ சிட்டி' கோழிக்கடை**

8ஆவது கிளை இன்று (08.11.2025) சனிக்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கப்படுகின்றது.

**இன்று தொடக்கம் கோழி இறைச்சி, முட்டை மற்றும் உரித்த கோழி சுகாதார முறைப்படி சுத்தம் செய்து விரும்பிய விதத்தில் வெட்டித் தரப்படும். மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.**

| | | | |
|---|---|---|---|
| இன்றைய விலை | புறொயிலர் உயிர்க்கோழி | - 1 kg | 700.00 |
| | புறொயிலர் இறைச்சி | - 1 kg | 950.00 |
| | உயிர்க் கோழி | - 1 kg | 1200.00 |
| | கல்பேற் உயிர்கோழி | - 1 kg | 650.00 |
| | கல்பேற் இறைச்சி | - 1 kg | 1000.00 |
| | பேரன்ஸ் உயிர்கோழி | - 1 kg | 850.00 |
| | பேரன்ஸ் இறைச்சி | - 1 kg | 1200.00 |

இவை அனைத்தும் எமது அனைத்து கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைமையகம்:**

**குருநகர், யாழ்ப்பாணம்.**

தொடர்பு: 021 430 3354

(CS 30693) A-1



## பணியாளர் தேவை

சாவகச்சேரியில் உள்ள சமையல் எரிவாயு விநியோக நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. **வாகன சாரதி**
   (கனரகவாகன அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் மட்டும்)
2. **விற்பனைப் பிரதிநிதி**
   (Sales Representative)
3. **அலுவலக உதவியாளர்** (ஆண், பெண்)
   சாவகச்சேரியை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 96 87 961

(CS 30686)A



## மணல் விற்பனைக்கு

**கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு.**

- தென்மராட்சி - 50,000
- யாழ்மாவட்டம் - 55,000
- வடமராட்சி - 55,000

**விநியோகிக்கப்படும். மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.**

தொடர்பு: 077 074 7491



## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு வேலையாட்கள் தேவை.
சாவகச்சேரியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 398 0145

(CS 59845) E




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org